**கூடுதல் சார்பு நீதிமன்றம், திருப்பூர்.**

**OS.No. 289/2014**
திருமதி.வள்ளியாத்தாள் (P.W. –1) **09.02.2026**

**<u>மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில் சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 9 மற்றும் 11 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

1. தாவா சொத்தில் வாதியும் பிரதிவாதிகளும் கூட்டு சுவாதீனத்தில் உள்ளார்கள் என்பதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்து உள்ளீர்களா என்றால் தாக்கல் செய்துள்ளேன். என்ன ஆவணம் என்றால் 1946,1975,1980 ஆவணம் கொடுத்துள்ளேன். அந்த ஆவணங்கள் சுவாதீனத்தை காட்டக்கூடிய ஆவணங்கள் இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கு உரிய பழைய பட்டா பாஸ்புத்தகம் அல்லது யூ டி ஆர் ஆவணங்கள் தாக்கல் செய்து உள்ளீர்களா என்றால் தாக்கல் செய்துள்ளேன். அவ்வாறு ஆவணங்கள் தாக்கல் செய்யப்படவில்லை பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்திற்குரிய வரி ரசீது தாக்கல் செய்து உள்ளீர்களா என்றால் தாக்கல் செய்துள்ளேன். அம்மாதிரி தாக்கல் செய்யவில்லை தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

2. தாவா சொத்தில் நான் கூட்டு சுவாதீனத்தில் இல்லை என்றால் சரியல்ல. என்னுடைய தகப்பனாருக்கு தாவா சொத்துக்கள் எதன் அடிப்படையில் பார்த்தேன் என்றால் 1946 ஆம் ஆண்டு பத்திரத்தின் படி பாத்தியம். தாவா அ பட்டியலிட்ட சொத்தை ஏற்கனவே என்னுடைய தகப்பனார் என்னுடைய சகோதரிக்கு தான செட்டில்மெண்ட் மூலம் பாத்தியபடுத்தி கொடுத்து விட்டார் என்றால் சரி. அந்த ஆவணம் செல்லாத ஆவணம், வற்புறுத்தி பெறப்பட்ட ஆவணம் என்று சாட்சி கூறுகிறார்.

3. அந்த ஆவணத்தில் அந்த சொத்து சீதனமாக என்னுடைய சகோதரிக்கு கொடுக்கப்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் தெரியும். சீதனமாக அந்த

சொத்து கொடுக்கப்பட்டதால் தான் அதை ரத்து செய்வதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரியில்ல. ஏற்கனவே தாவா சொத்துக்களை பொறுத்து செட்டில்மெண்ட் ஆவணத்தின் அடிப்படையில் 1,2, 2ம் பிரதிவாதியின் தந்தை தங்கமுத்து,3 பிரதிவாதி,4,7,8,24ம் பிரதிவாதியின் தகப்பனார் சின்னுசாமி, 25 ம் பிரதிவாதி மற்றும் பழனிசாமி மனைவி கண்ணம்மாள் ஆகியோர் 09.12.1985 ம் தேதி பதிவு செய்து பாகம் பிரித்துக் கொண்டார்கள் என்றால் சரி. அந்த ஆவணம் செல்லாது. அதன் அடிப்படையில் செக்கு பந்தி கண்டு பிரதிவாதிகள் பிரிக்கப்பட்ட சொத்துக்களில் சுவாதீனமடைந்து அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் தவறு.

4. 09.12.1985 பாகப்பிரிவினை பத்திரம் நடைமுறைக்கு வந்துள்ளது என்றால் தவறு. தாவா தாக்கல் செய்வதற்கு முன்பு வில்லங்கச் சான்றிதழ் பெற்று பார்த்தேன் என்றால் ஆமாம். 09.12.1985 பாகப்பிரிவினை பத்திர விபரங்களை வில்லங்கத்தின் மூலம் தெரிந்து கொண்டீர்களா? என்றால் வரவில்லை. வில்லங்க விவரங்கள் உள்ளது. மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு. அதனால் தான் அந்த ஆவணத்தை மறைத்து தாவாவில் தாக்கல் செய்து முதல் விசாரணையில் சொல்லாமல் விட்டுள்ளேன் என்றால் தவறு. மேலே சொன்ன சொத்துக்கள் பாகபிரிவினை ஏற்பட்டுவிட்டது என்பதை தெரிந்த பின்பும் பொய் வழக்காடுகிறேன் என்றால் தவறு. என்னுடைய தகப்பனார் உயிருடன் இருந்தபோது தாவா சொத்துக்களில் பாகம் கேட்டேனா என்றால் கேட்டேன்.

5. அம்மாதிரி கேட்கவில்லை எனக்கு நிறைய சீர்வரிசைகள் செய்து விட்டதால் தாவா சொத்து என்னுடைய சகோதரிக்கு தானமாக கொடுத்ததால் தான் கேட்கவில்லை என்றால் தவறு கேட்டேன். என்னுடைய தகப்பனார் இறந்த பிறகு தாவா சொத்துக்களின் விலை அதிகமாகி விட்டதால் ஆதாயம் அடைய வேண்டி பொய் வழக்கு தாக்கல் செய்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு. தாவா ஏ பட்டியலிட்ட சொத்துக்களில் எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. 9, 11 பிரதிவாதிகள் தாவாவிற்கு அவசியமற்ற தரப்பினார்கள். அவர்களுக்கு எதிராக தாவா தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்

6. வா.சா.ஆ– 7 ல் வா.சா.ஆ– 1 ஆவணத்தின் விவரங்கள் சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல.வா.சா.ஆ– 7 சொத்து சுயாஜித்த சொத்து என்று சொல்வதே தவறு என்றால் சரியல்ல. தாவாவில் முதலில் தாக்கல் செய்து சொல்லி உள்ள வழக்குரை சங்கதிகளுக்கும் முதல் விசாரணை சங்கதிகளும் மாறுபடுகிறது என்றால் சரியல்ல. வா.சா.ஆ– 7 க்கும் தாவா சொத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் தவறு. தாவா தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் தவறு.

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

ஒம்/–கே.ஆர்.கண்ணன்
கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.

## கூடுதல் சார்பு நீதிமன்றம், திருப்பூர்.

**OS.No. 289/2014**

திரு.பொன்னுசாமி (P.W –2) **09.02.2026**

**<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 5ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

1. வாதி தாவாவை எதற்காக தாக்கல் செய்து உள்ளார் என்றால் பாகப்பிரிவினை கேட்டு தாக்கல் செய்துள்ளார். யாருடைய சொத்தை பாகம் கேட்டுள்ளார் என்றால் மனைவியின் சொத்தை கேட்டுள்ளார். என்னுடைய மனைவிக்கு தாவா சொத்துக்கள் எப்படி பாத்தியம் என்றால் அவருடைய தகப்பனாருக்கு பாத்தியப்பட்டது. என்னுடைய மனைவியின் தகப்பனார் தங்கமுத்துவிற்கு 1946 ஆம் வருடம் தாவா சொத்து பாகப்பிரிவினை மூலம் பாத்தியப்பட்டது என்றால் சரி. அந்த பாகபத்திரம் தவறாக செய்யப்பட்டுள்ளது.

2. பாகப்பிரிவினை ஆவணம் தவறு என்பதை பொறுத்து என் மனைவி நடவடிக்கை எடுத்து உள்ளாரா என்றால் சரியல்ல. பாகப்பிரிவினை ஆவணத்தில் 1946 ஆம் வருடம் என்னுடைய மாமனார் தங்கமுத்து விற்கும் 6 நபர்களுக்கு சேர்த்து 36.84 செண்ட் ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் ஆமாம். அந்த சொத்தில் பாகம் கேட்டு என் மனைவி வழக்கு தாக்கல் செய்து உள்ளார் என்றால் சரி. இன்னொரு சொத்தும் உள்ளது. என்னுடைய மாமனார் 1946 ஆம் வருடம் பாகப்பிரிவினை மூலம் பாத்தியப்பட்ட பொதுவான சொத்தை ஏழாம் பிரதிவாதிக்கு தான பத்திரம் ஏற்படுத்திக் கொடுத்துள்ளார் என்றால் சரி, தப்பாக செய்து கொடுத்து விட்டார். அந்த ஆவணம் தவறு என்று எந்த பரிகாரமும் என் மனைவி தாவாவில் கேட்கவில்லை என்றால் தவறு, கேட்டுள்ளார். தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எந்த பரிகாரமும் என் மனைவி கோரவில்லை என்றால் சரியல்ல. ஏழாம் பிரதிவாதி பெயரில் ஏற்பட்ட தான செட்டில்மெண்டின் படி 1946 ஆம் வருட

பாகப்பிரிவினையில் அந்த சொத்தில் மற்ற பாகதாரர்களுடன் சேர்ந்து 1985 ஆம் வருடம் பாகம் ஏற்பட்டு ஏழாம் பிரதிவாதி செட்டில்மெண்ட் சொத்தை அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரி. இரண்டு ஆவணமே தவறு.

4. ஏழாம் பிரதிவாதி செட்டில்மெண்ட் ஆவணத்தின் அடிப்படையில் ஏ பட்டியலிட்ட சொத்தை பாகம் பிரித்து அனுபவம் செய்து வருவதால் பாகப்பிரிவினை பொறுத்து ஏ பட்டியலிட்ட சொத்தில் ஏற்பட வேண்டிய அவசியமே இல்லை என்றால் சரியல்ல. தாவா பி பட்டியலிட்ட சொத்தை 1968 ஆம் வருடம் அந்த சொத்துக்குரிய பாகதாரர்கள் சொத்துக்களை பிரித்து சுவாதீனமடைந்து அனுபவம் செய்து வருவதால் என் மனைவிக்கு தாவா சொத்துக்களில் பாகமே ஏற்படாது என்றால் தவறு. பி பட்டியலிட்ட சொத்தில் என் மனைவிக்கு பாகம் வராது ஏ பட்டியலிட்ட சொத்தில் மட்டும் தான் பாகம் வரும் என்று சாட்சி தனிச்சையாக முன்வந்து கூறுகிறார். வழக்கு விவரங்களே தெரியாமல் என் மனைவி கேட்டுக் கொண்டதற்கு இணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன். தாவா தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

9 மற்றும் 11 பிரதிவாதிகள் அதே குறுக்கு விசாரணை ஏற்றுக்கொள்கிறார்கள்.

20,21,26 பிரதிவாதிகள் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

வா.சா.1 சாட்சியம் முடித்து வைக்கப்படுகிறது.

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

ஒம்/-கே.ஆர்.கண்ணன்
கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.